# பெண்ணிய வாதத்தில் 'பெண்' எனும் கருத்துநிலை : ஒரு பின்நவீனத்துவ நோக்கு

Dr. Mahir. I.L.M [1], Shireen Jahan. B.[2]

[1]Senior Lecturer, Department of Social Sciences, South Eastern University of Sri Lanka.
[2]Temporary Assistant Lecturer, Department of Social Sciences, South Eastern University of Sri Lanka.
shireenjahan94@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஆண், பெண் என்ற இருமைக்கருத்தியல்கள் ஏற்றத்தாழ்வான சமூக நடைமுறைகளைக் கொண்டதாகும். இதிலிருந்து சமத்துவத்தினை நோக்கிய குரலாக பெண்ணியவாத விவாதங்களின் போக்கு அமைந்திருந்தது. பிற்பட்ட காலத்தில் ஆணாதிக்கத்தினால் பின் தள்ளப்பட்ட பெண்ணை, அவளது உணர்வுகளை, பாலின கருத்துக்களை வெளிப்படையாக பேசுவதனூடாக 'பெண்' எனும் கருத்துநிலையை விளிம்பு நிலையில் இருந்து வெளியாக்கிய சிந்தனையாக பெண்ணியவாதம் அமைந்தது. எனினும் பெண்ணியவாதத்தின்படி பெண் பற்றிய கருத்துநிலை மையப்படுத்தப்பட்டு, ஆண் எனும் கருத்துநிலை விளிம்புநிலைக்குள்ளாவதை விமர்சனம் செய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வில் பின்நவீனத்துவ முறை, விளக்கமுறை என்பன பகுப்பாய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவ்வாய்வுக்காக இரண்டாம் நிலைத்தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள் மற்றும் விடயம் தொடர்பான இணையக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள் :** பெண்ணியம், விளிம்புநிலை, ஆண், பெண்

## அறிமுகம்

பெண்ணிய வாதத்தில் 'பெண்' எனும் கருத்துநிலை : ஒரு பின்நவீனத்துவ நோக்கு எனும் இவ்வாய்வானது எண்ணக்கரு ரீதியான பகுப்பாய்வாகும். இது பதினேழாம் நூற்றாண்டுகளிலிருந்து மேலைத்தேய நாடுகளில் வளர்ந்து வந்த ஒரு கருத்தமைவாகும். இது பின்நவீனத்துவம் வழங்குகின்ற மையம், விளிம்பு என்ற கண்ணோக்கில் பெண்ணியல் வாதம் அணுகப்படுகின்றன. இதில் மையம் ஆண் பாலினர் எனவும் விளிம்பு பெண் பாலினர் எனவும் பிரதியிட்டு சமூக நிலைப்பாடுகளில் 'பெண்' எனும் கருத்துநிலை புறந்தள்ளப்பட்டு வந்தமையினால் மறுக்கப்பட்ட உரிமைகள், வாய்ப்புகள், சுதந்திரம் என்பவற்றை பெற்றுக் கொள்ளும் வகையில் ஆணாதிக்க சமூகத்திற்கு எதிரான குரலாக கருத்தியல் ரீதியான இயக்கமாகவே பெண்ணிய வாதம் தோற்றம் பெற்றது.

‘Feminism’ என அழைக்கப்படும் ஆங்கிலப் பதமே தமிழில் பெண்ணியம் என அழைக்கப்படுகின்றது. இச் சொல் *feminia* என்ற இலத்தீன் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். இது ‘பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள’ (having the qualities of female) என்று பொருள்படுகின்றது. இச் சொல் முதலில் பெண்களின் குணாதிசயங்களை குறிப்பிடவே வழங்கப்பட்டது. பெண்ணியம் என்பதற்கு பல விளக்கங்கள் வழங்கப்பட்ட போதிலும் பெண்ணியம் என்பது பெண் அடக்கி ஆளப்படக் கூடாது, அவளைப் தனிமைப்படுத்தி சமூகத்தில் புறந்தள்ளி வைக்கக் கூடாது என பாலியல் சமத்துவ நோக்கிலே நோக்கப்பட்டது.

பெண்ணுக்கு சமூகத்தில் நிலவும் இரண்டாந்தர நிலைமை குறித்த விமர்சனங்கள் கிளம்பியவுடனே, பெண்ணியமானது ஆண், பெண் இருவாலரிடையே நிலவும் வேறுபாடுகள் வெறும் ஊகங்களே என்பதை நிறுவ முயற்சித்தன. அப்படியானால், பெண் - ஆண் மத்தியில் உள்ள பால் வேறுபாட்டை மறுதலிக்க வேண்டியதாகிறது. அப்போது தான் சம உரிமை கோர முடியும். மாறாக, பெண்ணியம் ஆண் - பெண் இருபாலாரும் சமமானவர்கள்; ஆனால் ஒரே மாதிரியானவர்கள் அல்ல (Equal, but not similar) என்ற வாதத்தை முன்வைக்கிறது. (மங்கை: 2003)

பெண்ணிய வாதமானது ‘பெண்’ எனும் கருத்தமைப்பில் எத்தகையக் கருத்தைத் தருவதாக எழுந்ததோ இன்று அந்தப் பார்வையிலிருந்து வேறுபட்ட பரந்தளவிலான நோக்கைக் கொண்டுள்ளது. பெண்ணிய வாத அமைப்புகளினுள் இணைந்து கொண்ட சிந்தனையாளர்களினதும், பெண்களினதும், உறுப்பினர்களினதும் தன்மைகள், கல்வி நிலை, வாழ்க்கைச்சூழல், அனுபவங்கள், கருத்துக்கள், சமூகப் பார்வைகள் என்பவற்றிற்கு அமைவாக பல்வேறு கருத்துப் போக்குகளைக் கொண்ட அமைப்புக்களாக பரவலடைந்தது.

மேலும், இப்பெண்ணியமானது ஒவ்வொரு காலத்திலும் முன்வைக்கின்ற பிரச்சினைகளைக் கொண்டு மூன்று நிலைகளாக பிரித்து நோக்கப்படுகிறது. பத்தொன்பதாம் மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியத்தில் பெண்களின் அரசியல் உரிமைகளான வாக்குரிமை, சொத்துரிமை போன்றவற்றை வலியுறுத்தி அவற்றில் காணப்படும் சமமற்ற தன்மையை எதிர்த்துப் போராடியதாக முதல் அலைப் பெண்ணியம் காணப்படுகிறது. இரண்டாம் அலைப் பெண்ணியமானது பெண் அடக்குமுறைகளில் இருந்து அழுத்தமானதும் ஆழமானதுமான விடுதலை பெற வேண்டும் என போராடியது. மேலும் மூன்றாம் அலைப் பெண்ணியமானது பின்நவீனப் பெண்ணியம் என அழைக்கப்படுவதுடன் ஆண், பெண் இருபாலாருக்குமிடையில் சமத்துவம் குறித்தும், இரண்டாம் பாலினமாக புறந்தள்ளி வைக்கப்படும் பெண்கள் தொடர்பாகவும் அதிகம் பேசுவதோடு பெண்ணியம் தொடர்பான முழு தோற்றத்தையும் மாற்றியமைத்தது. (Susan M. Shaw& Janet Lee: 2012)

பின்நவீனப் பெண்ணியமானது ஆண் மைய வாத சிந்தனைகளை பெண்ணியத்தில் தவிர்ப்பதாக காணப்படுகிறது. மேலும் ஆணாதிக்க கட்டமைப்பில், ஆணின் அதிகாரப் போர்வைக்குள் பெண்கள் இரண்டாம் பாலினர் என ஒடுக்கப்பட்டிருந்தமை, என்பற்றிலிருந்தெல்லாம் விலகி ஆண், பெண் என்ற சமூக உறவுகளிலிருந்த ஏற்றத்தாழ்வுகள் களையப்படுவதுடன் பெண்கள் தங்களது அடையாளங்கள், சமூகத்தின் பங்கு, உரிமைகள், பாலியல் கருத்துக்களை வெளிப்படையாக பேச வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றது.

பெண் என்ற கருத்தியலை கட்டவிழ்ப்பு செய்ய வேண்டும். பெண் என்பதற்கு ஏற்கனவே நிர்ணயித்துள்ள அர்த்தங்களைக் கொட்டிக் கவிழ்க்க வேண்டும். பெண்ணைப் பற்றிய மரபார்ந்த புனைவைத் தகர்த்து ஒரு புதிய பார்வையை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும். அப்போது தான் 'இல்லாதவளாகிப் போன பெண் இருத்தலுக்கு உட்பட முடியும்' என்பது தான் பின்நவீனத்துவ நிலைப்பாடு எனலாம். (சுரேஸ்: 2009)

இவ்வாறான கருத்துக்கள் காலப்போக்கில் விளிம்பு நிலையிலிருந்த 'பெண்' என்ற கருத்து நிலையை விளிம்பு நிலையிலிருந்து வெளியாக்கியதுடன் பெண்ணியத்தின் மையப்பொருளாக 'பெண்' எனும் கருத்து மையப்படுத்தப்பட்டது. எனினும் இங்கு 'பெண்' மையப்படுத்தலினால் 'ஆண்' எனும் கருத்துநிலை விளிம்பு நிலைக்குள்ளாகின்றது. இது பின் நவீனத்துவ ரீதியில் ஆராயப்பட வேண்டிய விவாதமாகின்றது.

**பின்நவீனத்துவம்**

பின் நவீனத்துவமென்பது நவீனத்துவத்தை தொடர்ந்து எழுந்த ஒரு மரபாகும். இம் மரபானது மெய்யியல், கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம் போன்ற பல்வேறு துறைகளிலும் தாக்கம் செலுத்தியுள்ளது. பின்நவீனத்துவம் என்பதற்கு தனியானதும் திட்டவட்டமானதுமான வரையறை கொடுப்பது கடினமான ஒன்றாகும். ஏனெனில் இது ஒரு கோட்பாடோ அல்லது மெய்யியல் எண்ணக்கருவோ கிடையாது. மேலும் இதனை ஒரு குறுகிய வட்டத்தினுள் வைத்து நோக்க முடியாது. மாறாக இது மாற்று வகைச் சிந்தனையை ஆதரிக்கின்ற ஒரு முறையியல் ஆகும்.

பின்நவீனம் என்பது ஒரு தனித்த கோட்பாடு அல்ல. இது தர்க்க ரீதியாக கட்டுமை செய்யப்பட்ட அனைத்து கோட்பாடுகளையும் நிராகரித்தலே அதன் பிரதான நோக்கமாகும். இது பெருங் கோட்பாடுகளையும் பெரும் உரைகளையும் நிராகரிப்பதாக காணப்படுகிறது. மேலும் ஒருமைத் தன்மையை பன்மைத் தன்மையாக்கல், சமூக நியமங்களினால் ஒதுக்கப்பட்ட, விலக்கப்பட்ட, முக்கியமற்றவை என கருதப்பட்டவற்றை பேசும் பொருளாகக் கொண்டு விவாதிக்கின்றன. பின்நவீனத்துவத்தின் நோக்கில் எதுவும் அறுதியிட்டு முடிந்த விடயம் எனக் கூறும் வகையில் நிச்சயமானதும் உறுதியானதுமென எதுவுமில்லை. இவர்களின் கருத்தில் அனைத்தும் இயக்கத்திற்கும் மாற்றத்திகும் உரியவையாகும் என்கின்றது.

பின்நவீனம் எனும் பதமானது இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு பின்பாக மேலை நாடுகளில் தோற்றம் பெற்றதாகக் காணப்புடுகிறது. இதன் முன்னோடி சிந்தனையாளர்களாக ரோலன் பார்த், லியோதார்த், கில்லிஸ் டெல்லியூஸ், ஜீன் பார்த்திலண்ட், ஜாக்ஸ் டெரிடா, லக்கான், மிஷல் பூக்கோ, இமானுவல் லெவினாஸ், லூஸி இரிகரே, ஜூலியா கிறிஸ்தோவா போன்றோரை நோக்க முடியும் (O'Donnell: 2003). மேலும் பின்நவீனத்துவ அடிப்படைக் கருத்துக்களாக ஆசிரியன் இறந்து விட்டான், வாசகன் கொள்வதே அதனுடைய பொருள், கோட்பாடுகளைக் கொண்டு உலகத்தை புரிந்து கொள்ள முடியாது, சரியான உண்மை என எதுவும் கிடையாது, மொழி என்பது குறிகளின் விளையாட்டு, கட்டவிழ்ப்பு செய்தல், மையம் தகர்த்தல் போன்றவற்றை முன் மொழிகின்றன.

இந்த வகையில் பின்நவீனமானது உலக வரலாற்றுப் போக்குகளில் இரண்டாம் பாலினர் என ஒடுக்கி வைக்கப்பட்ட பெண்கள் குறித்தும், ஓரினச் சேர்க்கையாளர்கள், பாலினக் கருத்துக்கள் குறித்தும் பேசப்படுவதன் மூலம் இது உலக வரை முறையான நியமங்களை அல்லது விடயங்களை தலைகீழாக நோக்குகிறது. இந்த வகையில் சமூக இருமைகளான ஆண் - பெண் என்பவர்களுக்கிடையிலான ஏற்றத் தாழ்வினை, அதிகாரப் பிண்ணனியை பின்நவீனம் கேள்விக்குட்படுத்துகின்றது.

**பின்நவீன நோக்கில் பெண்ணியம்**

பெண்ணியமானது பின்நவீன கருத்துக்களான மையம், விளிம்பு என்ற கருத்துக்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்ட வாதமாகவே காணப்படுகின்றது. இதன்போது ஆணாதிக்க சமுதாயத்தில் தன்னை அறியாமலே பெண் ஆணுக்கு அடிமையாகின்றாள். இதனால் சமூக கண்ணோக்குகளில் ஆண் மையம் என்ற இடத்தை அடைகின்றான். ஆணும் பெண்ணும் சமூகத்தின் இரட்டைக் கருத்தமைவாக இருப்பினும் இச்சமூக அமைப்புக்கள் இருபாலரிடையேயும் ஒரு மாயையான ஏற்றத்தாழ்வினை உருவாக்கி பெண்களை ஆளும் பொருட்களாக மாற்றி வருகின்றது. இதனால் பெண்கள் தங்களது நிலை சமூகத்தில் எவ்வாறானது என அறியாதவர்களாக ஆணின் கட்டுப்பாடுகளால் அடக்கப்பட்டு அதிகாரம் செய்யப்படுபவளாகவும், ஒரு போகப்பொருளாகவும் பார்ப்பதோடு இரண்டாம் நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள். இந்நிலையில் விளிம்பு நிலையிலுள்ள பெண்ணிற்கு அவளுக்கு எதிராக அமைந்துள்ள சமூக நடைமுறைகளுக்கு குரல் எழுப்பும் நடைமுறை கருத்தியலாக பின்நவீனப் பெண்ணியம் அமைகின்றது.

**விமர்சன ரீதியான பகுப்பாய்வு**

பெண்ணியவாதத்தின் பேசும் பொருளாக 'பெண்' எனும் கருத்தமைவு அமைவதினால் இங்கு பெண் என்பது பின்நவீனத்துவப் பார்வையில் மையமாகின்றது. இதன்போது பெண்ணிய வாதங்களில் ஆரம்ப சிந்தனைகளில் பொதுமைப்படுத்தப்பட்ட மையம் எனப் பேசப்பட்ட 'ஆண்' பெண்ணிய வாதக் கருத்துக்களினால் விளிம்பு நிலை அடைகின்றான்.

பெண்ணிய வாதமானது பிரான்ஸ், அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஆசிய நாடுகளிலும் வளர்ச்சியடைந்து வந்தன. ஒவ்வொரு சமூகத்தினரும், பெண்ணிய வாதிகளும் பெண்களை மையப்படுத்தும் சந்தர்ப்பங்களில் ஆண்கள் சமூக நடைமுறைகளில் புறந்தள்ளப்டுகிறார்கள்.

பெண்ணிய வாதம் எனும் போது அது தனியே பெண் சிந்தனையாளர்களை கொண்டு மட்டும் தோன்றிய கருத்தியலாக அமைந்து விடாது. ஆண்களின் பங்கும் இக்கருத்து உருவாக்கத்தில் இருக்கவே செய்கின்றது. ஒரு பெண் சமூகத்தை தனித்தவளாக எதிர் நோக்கினாலும் அவளின் பின்னனியில் அவள் குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, சகோதரன், கணவன், மகன் போன்ற ஆண்களின் துணைகளும் கிடைக்கப்பெருகின்றன. பெண்ணியவாதிகள் என அடையாளப்படுத்தப்பட்ட பெண் சிந்தனையாளர்களும் சமூகத்தின் நடைமுறைகளான திருமண பந்தத்தில் இணைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இன்று அனேகமான பெண்ணியவாதிகள் பெண்கள் ஆண்களைப் போல இருப்பதனை சமத்துவம் என்கின்றனர். இதிலிருந்து கிளம்பும் விவாதமானது எம்மை இரண்டாவது பொருளிற்கு இட்டுச் செல்கின்றது. பெண்ணியம் சமத்துவம் கோருகின்றதா? ஆண், பெண் வித்தியாசங்களை அழுத்தமாக விளக்குகிறதா? பெண்ணியம் ஆணோடு பெண் சரி நிகராக இருக்க விரும்புவதை வலியுறுத்துகிறதா? பெண் ஆண்களோடு சமமாக இருப்பதற்கு விரும்புகின்றனர் எனின் அவர்களுக்கிடையேயான வேறுபாட்டை கூறி தனித்தனியான உலகமாக நிறுவ விரும்புகின்றதா? சமத்துவம் தான் பெண்ணிய நோக்கம் என்றால் அது எந்தவகை ஆண்களிடம் இருந்து எவ்வகையான சமத்துவம் வேண்டப்படுகின்றது?, பெண்கள், ஆண்கள் என்பவர்களிடத்திலான வேறுபாடுகளை வலியுறுத்துவது தான் பெண்ணியக் குறிக்கோள் என்றால் அவை உயிரியல் வேறுபாடுகளா? சமூக, பொருளாதார வேறுபாடுகளா? என்றெல்லாம் கேள்விகளை தொகுக்கக் கூடியதாக அமைகின்றது. (மங்கை: 2003)

பெண்ணியவாதம் ஆண், பெண் இருபாலாருக்குமிடையிலான சமத்துவத்தினை பெறுவதை நோக்காகக் கொண்டு எழுந்திருந்தாலும் பெண்ணியவாத கருத்துக்களின் பரவலாக்கம் அனைத்து இடங்களிலும் பெண்னை காப்பாற்றும் உத்தியாக அமைவதோடு ஆணை மிரட்டும் ஆயுதமாகவும் மாறி விடுகின்றது.

பின்நவீனத்துவ சிந்தனையில் திட்டவட்டமான மையம் எனக் கொண்ட அமைப்புக்கள் நிராகரிக்கப்பட்டு அதற்கு எதிரான விளிம்பு நிலையில் உள்ளவைகள் மீது அக்கறை செலுத்தப்படுகின்றது. ஆண் தான் மையம், அவனது நடவடிக்கைகள் ஆணாதிக்க சூழல் தந்தைவழிச் சமூகம் போன்றவை தான் பெண்ணை விளிம்பு நிலைக்கு உள்ளாக்குகின்றது என்ற கோஷங்களுடன் தோன்றிய விவாதத்தின் மையப்பொருளான 'பெண்' என்ற கருத்தமைவால் சமூகத்தில் ஆண் மீண்டும் விளிம்பாகின்றான். பின்நவீனத்துவ சிந்தனையாளரான டெரிடா மையத்தின் மீதான தாக்குதல் என்ற கருத்தை

முன்வைத்தவராக காணப்படுகின்றார். அவரின் சிந்தனைக் கூடாக ஆராயும் போது பெண்ணியத்தின் மீதான மீள்வாசிப்பு வேண்டப்படுகின்றது.

**முடிவுரை**

இவ்வாய்வானது பின்நவீனத்துவ சிந்தனையின் ஊடாக பெண்ணியவாதத்தை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்வதாக அமைந்துள்ளது. இதில் பெண்ணியவாதக்கருத்துக்கள், பெண்ணியவாத்தின் தோற்றம், பின்நவீனத்துவ கோட்பாடுகள், பின்நவீனத்தின் அடிப்படையான விமர்சனத்தின் ஊடாக சமூக ஏற்றத்தாழ்வினை, இரட்டை நிலைகளை கேள்விக்குற்படுத்துகின்றது.

பெண்னை மையப்படுத்தியதான பிற்போக்கான சிந்தனைகள் சமூகத்திடையே வளரத் தொடங்கிய வேளைகளில் பெண்ணடிமைத்தனத்தை இல்லாமல் செய்தல், பெண்விடுதலை நோக்கி நகர்தல் என உரிமைகளை வென்றெடுப்பதற்காக பெண்ணியம் வளர்ந்தன. இந்த வளர்ச்சிகள் ஆணிற்கு சமூக சவாலாக அமைந்தன.

பெண்ணியமானது ஆணாதிக்கத்திற்கு எதிராகத்தோன்றிய வாதமாகும். ஆனால் பெண்ணியம் பற்றிய பிழையான சமூகப் புரிதல்கள் தான் இன்றைய போக்கில் ஆண்களை விளிம்பாக்குகின்றன. பெண்ணிய விவாதங்கள் இதன் விளைவுகளின் ஒன்றாகவே ஆண், பெண் பிரயோகிக்கின்ற மொழியின் ஊடாக பால் வேறுபாட்டை ஆராயும் முயற்சிகளாக மாறியுள்ளன.

அத்துடன், சமூக ஏற்றத்தாழ்வுகளினால் உருவாகும் பிரச்சினைகளை பேசுபொருளாக மாற்றுகின்ற பின்நவீனப்போக்கில் ஆண், பெண் என்ற இருமைக் கருத்தாக்கங்களை மையம், விளிம்பு என நோக்கினால் ஒன்று மையமாகும் சந்தர்பத்தில் மற்றையது விளிம்பு நிலையை அடைகின்றது. இந்நிலையில் ஆண், பெண் என்ற இருமைகளில் எதனையும் மையமாகக் கொள்ள முடியாது. அடிப்படையில் இவை இரண்டும் விளிம்பு நிலை கருத்தாக்கங்கள் தான் எனக் கொள்ளக் கூடியதாக அமைகின்றது.

**உசாத்துணைகள்**

**நூல்கள்**


Freeman, Jane. (2005). *Feminism*. New Delhi: Viva Book Pvt. Ltd.

Martin Pugh. (2000). *Women and the womens movement in Britain, 1914 – 1999* (2 ed.). London: McMillan press Ltd.

O'Donnell, K. (2003). *Post Modernism.* England: Lion Access Guidence.

Raghunath Ghosh. (2005). *Facts of Feminism*. West Bengal: CWS, University of North Bengal.

Susan M. Shaw & Janet Lee. (2012). *Women's Voices, Feminist Visions: Classic and Contemporary Readings* (5 ed.). New York: McGraw-Hill.

Wood, J. T. (2003). *Gendered lives communication, gender,and culture* (5 ed.). Melbourne: Thomson Wadsworth.

இரயாகரன், பி. (2002). *ஆணாதிக்கமும் சமூக ஒடுக்கு முறைகளும்.* சென்னை: கீழைக்காற்று வெளியீட்டகம்10. அவுலியா சாகிபு தெரு. எல்லிசுசாலை.

காவ்யா சண்முகசுந்தரம். (2007). *பெண்ணியமும் பிரதிகளும்.* சென்னை: காவ்யா, 16. 2ம் குறுக்குத்தெரு. டிரஸ்ட்புரம். கோடம்பாக்கம்.

கிருஷ்ணராஜா, சோ. (1999). *பின்நவீனத்துவம்: ஓர் அறிமுகம்.* ஒலுவில்: தென் கிழக்குப் பல்கலைக்கழகம்.

கேசவன், சிவசேகரம், முருகையன் மற்றும் வேனுகோபால். (2007). *பின்நவீனத்துவம்: மாயைகளைக் கட்டவிழ்த்தல்.* தேசிய இலக்கியப் பேரவை.

சுரேஷ், எம். ஜி. (2009). *பின்நவீனத்துவம் என்றால் என்ன?.* சென்னை: அடையாளம்.

பஞ்சாங்கம், க. (2007). *பெண்ணின் மொழிப்படைப்பு (பெண்ணியக் கட்டுரைகள்).* சென்னை: காவ்யா, 16. 2ம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடாம்பாக்கம்.

பிரேமா, இரா. (1994). *பெண்ணியம்.* மெட்ராஸ்: பாவை பிரின்டர்ஸ்.

மங்கை, அ. (2005). *பெண்ணிய அரசியல்.* சென்னை: பரிசல்.

ஜெயராசா, சபா. (2006). *பின்நவீனத்துவத்தை விளங்கிக் கொள்ளல்.* கொழும்பு: முற்போக்கு கலை இலக்கியப் பேரவை.

**<u>இணையத்தளம்</u>**

Feminism. (n.d). *Feminism Essays.* Retrieved from http://www.exampleessays.com/viewpaper/11317.html. Assessed on 2019.12.06

Kathy Caprino. (2017). *What Is Feminism, And Why Do so many Women and Men Hate It?*. Retrieved from https://www.forbes.com/sites/kathycaprino/2017/03/08/what-is-feminism-and-why-do-so-many-women-and-men-hate-it/. Assessed on 2019.12.06

Mikkola, M. (2017). *Feminist Perspectives on Sex and Gender*. Stanford Encyclopedia of Philosophy. Retrieved from https://plato.stanford.edu/entries/feminism-gender/. Assessed on 2019.12.06

Rosie. (n.d). *What is Feminism?*. Retrieved from https://rosie.org.au-world/womens-rights/what-is-feminism. Assessed on 2019.12.07

Stein, C.D. (2015). *A Brief History: The Three Waves of Feminism*. Retrieved from https://www.progressivewomensleadership.com/a-brief-history-the-threewaves-of-feminism. Assessed on 2019.12.06